செ.வெ.எண்: 197 நாள்: 22/03/13

**நாள்: 22-03-2013**

## செய்தி வெளியீடு

## 39வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-2013

## நிறைவு விழா

சென்னை தீவுத்திடலில் சுற்றுலா பொருட்காட்சி 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. **மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணைப்படி இவ்வாண்டு தீவுத்திடலில் 39 –வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்திட ரூபாய் ஐம்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னைத் தீவுத்திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. இப்பொருட்காட்சி 2-1-2013 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பொருட்காட்சியில் 27 மாநில அரசுத் துறைகள், 14 அரசுத் துறை நிறுவனங்கள், 3 மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், 2 பிற மாநில அரசுத் துறைகள் ஆக 46 அரங்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன.

70 நாட்கள் சிறப்பாக நடைபெற்று, நேற்று (21-03-2013) நடைபெற்ற நிறைவு விழாவில் திரு ஹேமந்த்குமார் சின்ஹா, இ.ஆ.ப., அவர்கள் சுற்றுலாத்துறையின் ஆணையர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு பூ. செந்தூர் பாண்டியன் அவர்கள் தலைமை ஏற்றார். திருமதி பா. வளர்மதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு கே.டி. பச்சைமால் அவர்கள் சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு சைதை துரைசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்கள், முனைவர் இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் சுற்றுலா , பண்பாடு, மற்றும் அறநிலையங்கள்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் சிறப்புரை ஆற்றினார்கள் மற்றும் விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றம் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். திரு எஸ். கேப்ரியல், பொது மேலாளர்(நிர்வாகம்) தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.

இப்பொருட்காட்சியை 11-01-2013 முதல் 21-03-2013 வரை ஆகிய 70 நாட்களில் 7.07.802 பெரியவர்களும், 1,67,357 சிறியவர்களும், ஆக மொத்தமாக 8,75,959 பேர் கண்டு களித்துள்ளனர். இதன் மூலம் ரூ. 1,22,76,600/- நுழைவுக் கட்டண வருவாயாக அரசுக்கு கிடைத்துள்ளது. இப்பொருட்காட்சியை 5 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்கள் சலுகைக் கட்டணத்தில் கண்டு களித்தனர். இப்பொருட்காட்சி நடைபெற்ற 70 தினங்களிலும் மாலை வேளையில் அண்ணா கலை அரங்கத்தில் பரதநாட்டியம், நாடகம், இன்னிசை, பல்சுவைக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மொத்தம் 70 நாட்கள் நடைபெற்ற இப்பொருட்காட்சியின் மூலம் ரூ. 491 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. ரூ.290 இலட்சம் நிகர இலாபம் கிடைத்துள்ளது. இது 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சியில் கிடைத்த நிகர வருவாயாக கிடைத்த 252 இலட்சத்தை விட இந்த ஆண்டு ரூ.38 இலட்சம் கூடுதலாக நிகர இலாபம் கிடைத்துள்ளது.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9